மெட்ரோ ரயில் வாகன சேவையில்

# நவம்பர் மாதத்தில் 67 ஆயிரம் பேர் பயணம்

## அதிகாரி தகவல்

சென்னை, டிச.5-

ஷேர் ஆட்டோ, ஷேர் டாக்சி, சிருந்து இணைப்பு சேவை ஆகிய மெட்ரோ ரயில் வாகன சேவை மூலம் கடந்த மாதம் 67,774 பேர் பயணம் செய்துள்ளதாக மெட்ரோ ரயில் அதிகாரி ஒருவர் தகவல் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறியதாவது:

சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் கடந்த 11.8.2019 முதல் தேர்ந்தெடுக்கப்பட்ட மெட்ரோ ரயில் நிலையங்களில் பயணிகளின் வசதிக்காக பல போக்குவரத்து சேவையை அறிமுகப்படுத்தியது. அதன்படி, 7 மெட்ரோ ரயில் நிலையங்களில் ரூ.5 கட்டணத்துடன் ஷேர் ஆட்டோ சேவையும், ரூ.10 கட்டணத்துடன் ஷேர் டாக்சி சேவையும் செயல்பட்டு வருகின்றது.

இந்த நிலையில், கடந்த மாதத்தில் மட்டும் ஷேர் டாக்சி மற்றும் ஷேர் ஆட்டோ சேவையை 39,294 பேர் பயன்படுத்தியுள்ளனர். இதேபோல், சிருந்து இணைப்பு சேவையை 25,520 பேர் பயன்படுத்தியுள்ளனர். மொத்தமாக கடந்த மாதம் மட்டும் 67,774 பேர் ஷேர் ஆட்டோ, ஷேர் டாக்சி மற்றும் சிருந்து இணைப்பு ஆகிய வாகன சேவையை பயன்படுத்தியுள்ளனர்.

குறிப்பாக, கடந்த 2018 ஆகஸ்ட் மாதம் முதல் 2019 நவம்பர் 30 வரையில் வாகன சேவையை 6 லட்சத்து 53 ஆயிரத்து 229 பேர் பயன்படுத்தியுள்ளனர். ஷேர் டாக்சி சேவையை அதிகபட்சமாக கோயம்பேடு நிலையத்தில் 1,292 பேரும், ஷேர் ஆட்டோ சேவையை அதிகபட்சமாக கிண்டி நிலையத்தில் 11,559 பேரும் பயன்படுத்தியுள்ளனர்.

சிருந்து இணைப்பு சேவையை அதிகபட்சமாக விமானநிலையத்தில் 12,882 பேரும் பயன்படுத்தியுள்ளனர். தற்போது 15 நிலையங்களில் செயல்பட்டு வரும் சிருந்து இணைப்பு சேவை கூடிய விரைவில் 32 மெட்ரோ ரயில் நிலையங்களிலும் முழுமையாக அமல்படுத்தப்படும். இதற்கான நடவடிக்கைகளில் நிர்வாகம் தீவிரம் காட்டி வருகிறது.

இவ்வாறு அவர் கூறினார்.